TNTP130023402025

| | |
|---|---|
| Presented on | : 14-10-2025 |
| Registered on | : 14-10-2025 |
| Decided on | : 04-08-2026 |
| Duration | : 0 years, 9 months, 21 days |

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், துறையூர்.

முன்னிலை – திரு.ரா.சுரேஷ்குமார், B.A., LLB., (Hons)., LLM.,

குற்றவியல் நீதித்துறை நடுவர், முசிறி

குற்றவியல் நீதித்துறை நடுவர், துறையூர் (மு.கூ.பொ)

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 நாள் செவ்வாய்கிழமை

M.C.No.27/2025

**CNR.No.TNTP13-002340-2025**

.....

| | |
|---|---|
| மனுதாரர்கள் | 1. கீர்த்திகா, 27/25<br>க/பெ.கௌதம், த/பெ.ராமர்,<br>2. மைனர் மகிஷா, த/பெ.கௌதம்,<br>1 மற்றும் 2 மனுதாரர்களின் முகவரி (1 ம் மனுதாரர் தனக்காகவும், 2 ம் மைனர் மனுதாரரின் தாயாரும் அடுத்த சினேகிதியும், காப்பாளர் என்ற ஹோதாவில்) கதவு எண்.3/31, கரைமேடு தெரு, செங்காட்டுப்பட்டி கிராமம், துறையூர் வட்டம், திருச்சி மாவட்டம். |
| மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் | திரு.K.அத்தியப்பன், B.Com., B.L., |
| எதிர்மனுதாரார் | கௌதம், (வயது 28),<br>த/பெ.பழனி,<br>க.எண்.80/2, மருந்துக்காரர் தெரு,<br>செங்காட்டுப்பட்டி கிராமம்,<br>துறையூர் வட்டம்,<br>திருச்சி மாவட்டம். |
| மனு தாக்கல் செய்த நாள் | 14.10.2025 |

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.08.04 18:23:47 +0530

| | |
|---|---|
| விசாரணை ஆரம்ப நாள் | 02.06.2026 |
| உத்தரவு நாள் | 04.08.2026 |

இம்மனு கடந்த 14.10.2025ம் தேதி எம்.சி.எண்.27/2025 என வழக்கு கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இறுதியாக 04.08.2026 ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.அத்தியப்பன், B.Com., B.L., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், மனுதாரர்கள் தரப்பில் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்யப்பட்டும், இறுதியாக இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்து இதுநாள்வரை பரிசீலையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது 1ம் மனுதாரர் தனக்காகவும், 2ம் மைனர் மனுதாரருக்காகவும், அவரது தாய் 1ம் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்து மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் மாதந்தோறும் ஜீவனாம்சம் 1,2 மனுதாரர்களுக்கு தலா 10,000/-ம் மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வழங்கவேண்டியும், செலவு தொகை கோரியும் பிரிவு 144 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) <u>மனுவின் சுருக்கம் –</u>**

1ம் மனுதாரர் செங்காட்டுப்பட்டியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் பொழுது 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பழக்கம் ஏற்பட்டு நாளடைவில் இருவரும் காதலித்து மனுதாரரின் குடும்பத்தினர் எதிர்ப்பை மீறி மனுதாரரும், எதிர்மனுதாரரும் கடந்த 11.07.2020ம் தேதி கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூரில் உள் ஓம் சக்தி திருக்கோவிலில் இருவரும் திருமணம் செய்து கொண்டதாகவும், 1ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் காதலித்து

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.08.04 18:23:54 +0530

திருமணம் செய்து கொண்டதால் திருமண பத்திரிக்கை அடிக்கவில்லை என்றும், 1ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் கோயம்புத்தூரில் 10 நாட்கள் குடும்பம் நடத்தி வந்ததாகவும், பின்பு எதிர்மனுதாரர் வீட்டில் சுமார் 1 1/2 வருட காலம் ஒன்றாக குடும்பம் நடத்தி வந்ததாகவும், திருமணத்திற்கு பிறகு ஆறு மாதம் கழித்து 1ம் மனுதாரரின் பெற்றோர்கள் சமாதானமாகி 1ம் மனுதாரருக்கு 7 பவுன் தங்க நகை அணிவித்தும் வீட்டிற்கு தேவையான உபயோகப்பொருட்கள் வாங்கி கொடுத்ததாகவும், 1ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் குடும்பம் நடத்தியதன் பயனாக 2ம் மனுதாரர் கடந்த 30.10.2021ம் தேதி துறையூர் ஜே.கே. மருத்துவமனையில் பிறந்ததாகவும், 1ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து குடும்பம் நடத்திய காலத்தில் எதிர்மனுதாரரின் தாயார் வசந்தா 1ம் மனுதாரரை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, அடித்து கொடுமைப்படுத்தியதாகவும், பிறகு 1ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் செங்காட்டுப்பட்டியில் 2022ம் வருடம் ஏப்ரல் மாதம் முதல் தனியாக வீடு வாடகைக்கு எடுத்து குடும்பம் நடத்தி வந்ததாகவும், பின்பு எதிர்மனுதாரர் தினமும் குடித்துவிட்டு வந்து 1ம் மனுதாரரை அடித்து கொடுமைப்படுத்தியதாகவும், 1ம் மனுதாரர் தனது குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு தனது பெற்றோர்களுக்கு மன வேதனை தரக்கூடாது என்ற நல்ல எண்ணத்திலும், தனது எதிர்காலத்தையும் 2ம் மனுதாரரின் எதிர் காலத்தையும் கருத்தில் கொண்டு எதிர்மனுதாரர் செய்த கொடுமைகளை தாங்கிக்கொண்டு தனது பெற்றோர்களுக்கு தெரியப்படுத்தாமல் வாழ்ந்து வந்ததாகவும், எதிர்மனுதாரர் 22.06.2024ம் தேதி முதல் மனுதாரர்களை அனாதையாக விட்டு விட்டு அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று அங்கேயே தங்கி கொண்டு இருந்து வருகிறார் என்றும், 1ம் மனுதாரர் ஊர் முக்கியஸ்தர்களிடம் சொல்லி எதிர்மனுதாரரிடமும், அவரது குடும்பத்தினரிடமும் கேட்ட பொழுது எதிர்மனுதாரர் குடிபோதையில் மனுதாரர்களையும், ஊர்முக்கியஸ்தர்களையும் மிகவும் கேவலமாக பேசி திருப்பி அனுப்பிவிட்டார் என்றும், 1ம் மனுதாரர் தற்பொழுது 2ம் மனுதாரரை வைத்துக்கொண்டு

SURESHKUMAR R
Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.08.04 18:24:03 +0530

வீட்டிற்கு வாடகை கொடுக்க முடியாமலும் ஜீவனத்திற்கு வழியில்லாமலும் 2ம் மனுதாரரின் மருத்துவ செலவிற்கு பணமில்லாமலும் மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார் என்றும், தற்பொழுது 1ம் மனுதாரரின் பெற்றோர்கள் தான் மனுதாரர்களுக்கு உதவி செய்து வருகிறார்கள் என்றும், மனுதாரர்கள் குடியிருக்கும் வீட்டின் உரிமையாளர் 1ம் மனுதாரர் வாடகை கொடுக்காத காரணத்தினால் வீட்டை காலி செய்யும் படி கூறியதாகவும், 1ம் மனுதாரர் வீட்டில் சீதனமாக கொடுத்த நகை 3 பவுன் நெக்லஸ் மற்றும் 1 பவுன் மோதிரம் ஆக மொத்தம் 4 பவுன் எதிர்மனுதாரர் வசம் உள்ளது என்றும், 1ம் மனுதாரர் வீட்டு வாடகை கொடுப்பதற்கும், ஜீவனத்திற்கும் 2ம் மனுதாரரின் மருத்துவ செலவிற்கும் கடந்த ஒரு வருட காலமாக தெரிந்தவர்களிடம் ரூ.2,00,000/-ம் கடன் வாங்கி தான் பிழைப்பு நடத்தி வருவதாகவும், கடன் கொடுத்தவர்கள் 1ம் மனுதாரரிடம் திருப்பி கேட்டு வருவதாகவும், 1ம் மனுதாரர் கடந்த 28.05.2025ம் தேதி துறையூர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்க கூறி புகார் அளித்துள்ளார் என்றும், துறையூர் காவல் நிலையத்தில் 1ம் மனுதாரர் கொடுத்த புகாருக்கு மனு ரசீது 626/2025 வழங்கியுள்ளார்கள் என்றும், எதிர்மனுதாரர் பால் கறவை மற்றும் பால் பண்ணை தொழில் செய்து அதன் மூலம் ரூ.60,000/- ம் வருமானம் ஈட்டி வருகிறார் என்றும், எதிர்மனுதாரருக்கு அவரது சொந்த கிராமம் செங்காட்டுப் பட்டி கிராமத்தில் மெத்தை வீடு உள்ளது என்றும், அதன் தற்கால மார்க்கெட் மதிப்பு சுமார் 50,00,000/-ம் என்றும், 1ம் மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் சட்டப்படியான கணவர் என்றும், 2ம் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் சட்டப்படியான தந்தை என்றும், எனவே 1,2 மனுதாரர்களுக்கு தேவையான உணவு, உடுக்க உடை, உறங்க உறைவிடம் மற்றும் மருத்துவ செலவிற்காக மாதந்தோறும் தலா ரூ.10,000/-கொடுக்க வேண்டும் என்று மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

2) மனுதாரர்கள் தரப்பில் 1ம் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் மனுதாரர்கள் தரப்பு ஆவண

SURESHKUMAR R
Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.08.04 18:24:11 +0530

சாட்சிகளாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பட்டு, எதிர்மனுதாரர் அதை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராததால், 20.11.2025 அன்று எதிர்மனுதாரர் தோன்றாத் தரப்பினராக்கப் பட்டுள்ளார்.

3) <u>தீர்வு–</u>

**i) எதிர்மனுதாரர், 1ம் மனுதாரருக்கு கணவன் என்ற முறையிலும், 2ம் மனுதாரருக்கு தகப்பனார் என்ற முறையிலும் பராமரிப்பு தொகை செலுத்த கடமைப்பட்டவரா? என்பதே ஆகும்.**

ii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், இந்நீதிமன்றம் கருத்தில் கொள்வது என்வென்றால், 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 11.07.2020 அன்று கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூரிலுள்ள ஓம் சக்தி திருக்கோவிலில் இருவரும் திருமணம் நடைபெற்றதாகவும், மேற்படி திருமணத்திற்கு பிறகு 10 நாட்கள் கோயம்புத்தூரில் குடும்பம் நடத்தி வந்ததும், மேற்படி திருமணத்தின் பயனாக 2ம் மனுதாரர் மைனர் மகிஷா பிறந்துள்ளார் என்பதும் தெரியவருகிறது. பிறகு எதிர்மனுதாரரின் தாயார் வசந்தா 1ம் மனுதாரரை அசிங்கமாக திட்டி அடித்து கொடுமைபடுத்தியதால், 1ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் செங்காட்டுப்பட்டியில் 2022ம் வருடம் ஏப்ரல் மாதம் முதல் தனியாக வீடு வாடகைக்கு எடுத்து குடும்பம் நடத்தி வந்துள்ளார் என்பதும், எதிர்மனுதாரர் தினமும் குடித்து விட்டு வந்து அடித்து கொடுமைப்படுத்தியும், பின்னிட்டு 1,2 மனுதாரர்களை 22.06.2024 முதல் அனாதையாக விட்டு விட்டு எதிர்மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டிலேயே தங்கிக்கொண்டதாகவும், 1ம் மனுதாரர் ஊர் முக்கியஸ்தர்களிடமும் அவரது குடும்பத்தினரிடமும் கேட்ட பொழுது எதிர்மனுதாரர் குடிபோதையில் 1ம் மனுதாரரையும், ஊர் முக்கியஸ்தர்களையும் கேவலமாக பேசி திருப்பி அனுப்பி விட்டதாகவும், 1ம் மனுதாரர் குடியிருக்கும் வாடகை வீட்டிற்கு வாடகை பணம் தராததால் வீட்டின் உரிமையாளர் வீட்டை

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.08.04 18:24:19 +0530

காலி செய்யும்படி சொன்னதாகவும், 1ம் மனுதாரர் வாடகை கொடுப்பதற்கும், ஜீவனத்திற்கும், 2ம் மனுதாரரின் மருத்துவ செலவு ஆகியவற்றிற்கு 1ம் மனுதாரர் தெரிந்தவர்களிடம் ரூ.2,00,000/-ம் கடன் வாங்கியதாகவும், கடன் கொடுத்தவர்களும் பணத்தை திருப்பி கேட்கிறார்கள் என்றும், 1ம் மனுதாரர் பணத்தை திருப்பிக்கொடுக்க வழியில்லாமல் கஷ்டப்பட்டு வருவதாகவும், அதனால் 1ம் மனுதாரர் கடந்த 28.05.2025ம் தேதி துறையூர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்க கூறி புகார் அளித்துள்ளார் என்றும், துறையூர் காவல் நிலையத்தில் 1ம் மனுதாரர் கொடுத்த புகாருக்கு மனு ரசீது 626/2025 வழங்கியுள்ளார்கள் என்றும், எதிர்மனுதாரர் பால் கறவை மற்றும் பால் பண்ணை தொழில் செய்து அதன் மூலம் ரூ.60,000/- ம் வருமானம் ஈட்டி வருகிறார் என்றும், எதிர்மனுதாரருக்கு அவரது சொந்த கிராமம் செங்காட்டுப்பட்டி கிராமத்தில் மெத்தை வீடு உள்ளது என்றும், அதன் தற்கால மார்க்கெட் மதிப்பு சுமார் 50,00,000/-ம் என்றும், 1ம் மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் சட்டப்படியான கணவர் என்றும், 2ம் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் சட்டப் படியான தந்தை என்றும், எனவே 1,2 மனுதாரர்களுக்கு தேவையான உணவு, உடுக்க உடை, உறங்க உறைவிடம் மற்றும் மருத்துவ செலவிற்காக மாதந் தோறும் தலா ரூ.10,000/-கொடுக்கவேண்டும் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iii) மனுதாரர்கள் தரப்பில் 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.1 ஆகவும், 2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.2 ஆகவும், 1ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் ம.சா.ஆ.1 ஆகவும், 2ம் மனுதாரரின் பிறப்புச்சான்றிதழ் ம.சா.ஆ.4 ஆகவும், 28.05.2025ம் தேதியிட்ட 1ம் மனுதாரர் துறையூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு ரசீது ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.08.04 18:24:27 +0530

மேற்கண்ட ஆவணங்களின் மூலம் எதிர்மனுதாரர், 1ம் மனுதாரரின் கணவர் என்பதும், 2ம் மனுதாரரின் தகப்பனார் என்பதும் தெரியவருகிறது.

iv) எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பட்டு, எதிர்மனுதாரர் அதை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராததால், 20.11.2025 அன்று எதிர்மனுதாரர் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டுள்ளார். மனுதாரர்கள் தரப்பு வழக்கை முரண்படுத்த எதிர்மனுதாரர் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. மேலும் எதிர்மனுதாரர் மனுதாரர்களை பராமரிப்பதை தவிர்த்து வருகிறார் என்பது ம.சா.1 சாட்சியத்தில் இருந்து தெரியவருகிறது. இந்நிலையில் எதிர்மனுதாரர், 1ம் மனுதாரரின் கணவர் என்பதாலும், 2ம் மனுதாரரின் தகப்பனார் என்பதாலும், எதிர்மனுதாரர் கணவர் என்ற முறையிலும், தகப்பனார் என்ற முறையிலும் பராமரிப்பு தொகை செலுத்த கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

v) எதிர்மனுதாரர் மாதம் ரூ.60 ஆயிரம் வருமானம் பெற்று வருகிறார் என்பதற்கான எந்த ஒரு ஆவணமும் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் எதிர்மனுதாரர் பெயரில் எவ்வித அசையும், அசையா சொத்துக்கள் இருப்பதற்கான ஆவணங்களும் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆனால் மனுதாரர்களை பராமரிக்க வேண்டிய கடமை எதிர்மனுதாரரை சார்ந்ததாகும். எனவே எதிர்மனுதாரர் மனுதாரர்களை பராமரிக்க கடமைப்பட்டுள்ளார் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

vi) மனுதாரர்களின் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டும், மனுதாரர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவம் மற்றும் இதர இன்றியமையாத செலவுகளை கருத்தில் கொண்டும், அவர்களது மருத்துவம், உணவு, உடை ஆகியவற்றை இன்றைய பொருளின் விலை, வாழ்க்கை தரத்தை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருக்கு மாதம் ரூ.3,000/-மும், 2ம் மனுதாரருக்கு அவர் 18 வயது பூர்த்தியடையும் வரை மாதம் ரூ.2,000/-மும், இந்த

SURESHKUMAR R
Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.08.04 18:24:34 +0530

மனு தாக்கல் செய்த தேதியில் இருந்து கணக்கீடு செய்து செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

vii) எனவே, எதிர்மனுதாரர் மேற்கண்ட மாத பராமரிப்பு தொகையை ஒவ்வொரு பிரதி மாதமும் 5 ஆம் தேதிக்குள், மனுதாரர்களுக்கு நேரடியாகவோ அல்லது வங்கி கணக்கு மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ அல்லது வேறு இணையவழி பணப்பரிவர்த்தனை மூலமாகவோ செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இவ்வாறாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 04 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.08.04 18:24:41 +0530

நீதித்துறை நடுவர் (கூ.மு.பொ)
துறையூர்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>**

**ம.சா.1** – கீர்த்திகா

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்–</u>**

| ம.சா.ஆ. | ஆவண விவரம் | தன்மை |
|---|---|---|
| ம.சா.ஆ 1 | 1 ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல். | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| ம.சா.ஆ 2 | 2 ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல். | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| ம.சா.ஆ.3 | 1 ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் அசல். | அசல் |
| ம.சா.ஆ.4 | 2 ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல். | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.08.04 18:24:49 +0530

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.5 | 28.05.2025 ம் தேதியிட்ட 1ம் மனுதாரர் துறையூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு ரசீது நகல். | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, ஆவணங்கள்</u>** – இல்லை

**<u>நீதிமன்ற தரப்பு சாட்சி, ஆவணங்கள்</u>** – இல்லை

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.08.04 18:24:56 +0530

நீதித்துறை நடுவர் (கூ.மு.பொ)
துறையூர்.